# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 17.03.2013



முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
தேத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்பூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
காத்தான்குடி இன்போ
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow


## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (89)

### 89. பயணங்கள் பல விதம், அதில் சில மரணங்களைத் தொடுபவை!




புலிகளின் புலனாய்வு விசாரணையாளர்கள் என்னிடம் கொழும்புக்கு இறுதியாகப் போய்வந்தது குறித்தும், கலாநிதி கே.சிறிதரன் அவர்களைக் கடைசியாகச் சந்தித்தது குறித்தும் வினவியபடியால், அதில் ஏதோ ஒரு விசேடம் இருப்பதாக ஊகித்துக் கொண்டேன். புலிகள் என்னைக் கடத்தியது 1991 டிசம்பர் 26ஆம் திகதி. அதற்கு சில நாட்கள் முன்னதாக நவம்பர் மாதத்தில் நான் கொழும்பு சென்று வந்திருந்தேன். என்னுடன் முகமாலையைச் சேர்ந்த கிருஸ்ணமூர்த்தி என்ற நண்பர் ஒருவரும் கூட வந்திருந்தார்.

நான் கொழும்பு சென்றதின் பிரதான நோக்கம் எனது புத்தகக் கடைக்கு சில பாடசாலை உபகரணங்களைக் கொள்வனவு செய்வதாக இருந்தது. என்னுடன் வந்த நண்பரின் நோக்கம் சவூதி அரேபியாவில் இருந்த தனது தம்பியுடன் தொலைபேசியில் கதைப்பதும், அவரிடமிருந்து பணம் பெறுவதுமாக இருந்தது.

அந்த நேரத்தில் புலிகளின் அனுமதி பெற்றே வெளி மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டும். அப்படி அனுமதி பெறுவதானால் புலிகளால் ஒவ்வொரு பகுதியிலும் நியமிக்கப்பட்டிருந்த 'சிற்றூர் அவை' என்ற புலிகளது நிர்வாக அமைப்பின் (ஊருக்குள் உளவறிவதும், புலிகளுக்கு எதிரானவர்களைப் பற்றி புலிகளுக்கு தகவல் வழங்குவதும்தான் அதன் பிரதான செயற்பாடாக இருந்தது) சிபார்சுக் கடிதத்தைப் புலிகளுக்குச் சமர்ப்பிக்க வேண்டும். நல்ல வேளையாக நாம் இருந்த அத்தியடிப் பகுதியில் இருந்த சிற்றூர் அவையின் தலைவராக எனது நெருங்கிய உறவினர் ஒருவர் இருந்ததால், சிபார்சுக் கடிதம் அதிக சிரமமில்லாமல் கிடைத்துவிட்டது.

சிற்றூர் அவையின் சிபார்சுக் கடிதம் கிடைத்தாலும், புலிகளின் அனுமதி வழங்கும் காரியாலயத்தில் பொறுப்பாக இருந்த 'பொடியன்' சம்பந்தம் சம்பந்தமில்லாத பல கேள்விகளை எல்லாம் கேட்ட பின்னரே, அனுமதிப் பத்திரம் வழங்கினான். அதன் பின்னர் அப்பொழுது நடைமுறையிலிருந்த கேரதீவு - சங்குப்பிட்டி பாதையினூடாகப் பிரயாணம் செய்து இராணுக் கட்டுப்பாட்டிலிருந்த வவுனியாவை அடையும் வரை, புலிகளின் பல சோதனைச் சாவடிகளில் விசாரணைக்கு உள்ளாக வேண்டும்.

அப்படி நாம் பயணம் செய்கையில் எமது மினி பஸ்ஸை பூநகரி வாடியடியில் வழி மறித்த புலிகளின் ஒரு குழு, நாம் பயணம் செய்த வாகனத்திலிருந்து மூவரை மாற்று இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இறக்கிச் சென்றனர். அவர்களுக்கு என்ன நடந்தது என்பது இதுவரையில் யாருக்கும் தெரியாது.

எனது கொழும்புக்கான இந்தப் பயணம் ஒன்றரை வருடங்களுக்கு மேலான காலத்தின் பின்னரே நடைபெற்றது. நான் 1964இல் கம்யூனிஸ்ட் கட்சி அரசியலில் ஈடுபடத் தொடங்கிய பின்னர், முதல் தடவையாக கட்சிக் கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக 1966இல் முதன் முதலாக கொழும்புக்குச் சென்றேன். அதன் பின்னர் அடிக்கடி கொழும்புக்கும், தென்னிலங்கையின் பல பகுதிகளுக்கும், கிழக்கு மாகாணத்துக்கும், மலையகத்துக்கும் கட்சிக் கூட்டங்களுக்காகச் சென்று வருவது வழமையாக இருந்தது.

ஆனால் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையில் யுத்தம் ஆரம்பமாகி, வடக்கு கிழக்குப் பகுதிகள் புலிகளின் பூரண கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர், நானும் சரி, ஏனைய பொதுமக்களும் சரி, முன்பு போல சாதாரணமாக நாட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்வது முடியாத காரியமாகப் போய்விட்டது. புலிகளின் அனுமதிப் பத்திரம் பெற்றுச் சென்றாலும், திரும்பி வந்த பின்னர் புலிகளின் கடுமையான விசாரணைகளுக்கு உள்ளாக வேண்டி இருந்தது. அதனால் பெரும்பாலான மக்கள் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியிடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து வந்தனர்.

எனது இறுதிக் கொழும்புப் பயணத்துக்கு முன்னர் 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் அளவில் கொழும்பு சென்று வந்தேன். அந்தப் பயணம் சாதாரணமாக 'சென்று வந்தேன்' என்று சொல்லக்கூடிய பயணம் அல்ல. அந்தப் பயணத்தின் போது நான் அனுபவித்த துன்பங்களையும், நெருக்கடிகளையும் அறிந்தால், அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தை விட்டு வெளியிடங்களுக்குச் சென்றவர்கள் அனுபவித்த இடர்பாடுகளை ஒருவர் நன்கு அறிந்து கொள்ள முடியும்.

நான் 1990இல் கொழும்பு சென்ற வேளையில், யாழ்ப்பாணம் கோட்டையில் நிலை கொண்டிருந்த இலங்கை இராணுவத்தை வெளியேற்றும் முயற்சியை புலிகள் பல நாட்களாகத் தொடர்ந்த வண்ணம் இருந்தனர். அப்பொழுது நானும் எது மனைவியும் கொக்குவில் பகுதியில் ஒரு வீட்டில் வாடகைக்குக் குடியிருந்தோம். எனது மனைவி முதன்முதலாகக் கர்ப்பமுற்றிருந்தாள்.

நான் கொழும்பு சென்று சில நாட்கள் தங்கியிருந்து எனது பணிகளை முடித்த பின்னர், யாழ்ப்பாணம்









புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்

புலம்பெயர் எல்.ரீ.ரீ.ஈ செயற்பாட்டாளர்கள் தங்களை மனித உரிமைக் காவலர்களைப்போல் காட்டிக்கொள்கிறார்கள்.

கதம்பமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை:

கலக்கமான இலங்கைத் தமிழரின் அரசியல் எதிர்காலம்

அரசியல் தீர்வைப் பின்தள்ளும் பிழையான மூலோபாயம்

முஸ்லிம்களுக்கு எதிரான வெறுப்பூட்டும் பிரச்சாரத்தை நிறுத்துங்கள்

Thendral Radio

புறப்படத் தயாரான போது, கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் செல்வதற்கான வசதிகள் முற்றாகத் தடைப்பட்டுப் போயின. யாழ் கோட்டையைக் கைப்பற்றும் புலிகளின் யுத்தம் தீவிரமடைந்ததால், கோட்டையில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினர் ஏவிய எறிகணைகள் நாம் தங்கியிருந்த கொக்குவில் பகுதி உட்பட யாழ் நகரின் பல பகுதிகளிலும் வீழ்ந்து வெடித்துக் கொண்டிருந்தன. இது எனக்கு மிகுந்த கவலையை ஏற்படுத்தியது. எப்படியும் யாழ்ப்பாணம் திரும்பி எனது மனைவியை பாதுகாப்பான இடத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் என விரும்பினேன்.



என்னைப் போன்று கொழும்பு சென்ற பலர் யாழ்ப்பாணம் திரும்ப முடியாமல் அங்கு சிக்கித் தவித்துக் கொண்டிருந்தனர். அப்படியான சிலர் தொடர்ந்து கொழும்பிலுள்ள விடுதிகளில் பணம் கொடுத்துத் தங்க முடியாத நிலைமையில், பம்பலப்பிட்டி கதிரேசன் கோவிலிலும், பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் தங்கியிருந்தனர். நானும் சில நாட்கள் விடுதியில் (லொட்ஜ்) தங்குவதும், வேறு சில நாட்கள் வெள்ளவத்தையில் இருந்த எனது பாடசாலைக்கால நண்பன் ஒருவனின் வீட்டில் தங்குவதுமாக இருந்தேன்.

தினசரி பம்பலப்பிட்டி சென்று என்போன்ற பலருடன் கலந்துரையாடி, ஏதாவது பிரயாண ஒழுங்குகளைச் செய்ய முடியுமா என ஆராய்ந்து வந்தேன். ஆனால் நாட்கள் பல ஆகியும் எந்த முயற்சிகளும் கைகூடி வருவதாகத் தெரியவில்லை. இந்த நிலைமையில் தினசரி நான் சந்தித்து வந்தவர்களில் சிலர் ஒரு ஆலோசனையை முன்வைத்தனர். அதாவது இலங்கைக் கடவுச்சீட்டு ஒன்றைப் பெற்று இந்தியாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து படகு மூலம் யாழ்ப்பாணம் செல்லலாம் என்பதே அவர்கள் முன்வைத்த ஆலோசனை! அந்தக் காலகட்டத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து புலிகளும், புலிகளது ஆதரவு பெற்ற பலரும் சர்வசாதாரணமாக தமிழ்நாட்டுக்குச் சென்று வந்ததால், இது ஒரு சுலபமான வழி என்பது அந்த நண்பர்களின் கருத்து. எனக்கும் அப்படிச் செய்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது.

எனவே புதுப்பிப்பதற்காக நான் எடுத்து வந்திருந்த எனது கடவுச்சீட்டை புதுப்பிக்கும் முயற்சியில் நான் ஈடுபட்டேன். தற்செயலாக இந்தியாவிலிருந்து படகு மூலம் யாழ்ப்பாணம் செல்வது சாத்தியமில்லாவிட்டாலும், திரும்பவும் விமானம் மூலம் கொழும்பு திரும்பிவிடலாம் என்பது எனது எண்ணமாக இருந்தது. ஆனால் அந்த நாட்களில் நேரடியாக கொழும்பிலிருந்த இந்தியத் தூதரகத்தில் இந்திய விஸா பெறுவது சாதாரண விடயமல்ல. இடைத்தரகர்களின் மூலம் ஒருசில நாட்களில் விஸா பெற்றுவிட முடியும் என்றாலும், அதற்கு ஆயிரக்கணக்கான ரூபா பணம் செலவழிக்க வேண்டும்.

இந்த நிலையில் நான் வழமையாக பம்பலப்பிட்டியில் சந்திக்கும் நண்பர்களில் சிலர் ஒரு தனியார் வாகனத்தை வாடகைக்கு ஒழுங்குசெய்து யாழ்ப்பாணம் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததை அறிந்தேன். அந்த முயற்சியில் கனடாவிலிருந்து வந்திருந்த கோண்டாவிலைச் சேர்ந்த ஒரு வாலிபர் தீவிரமாக ஈடுபட்டிருப்பதாக அறிந்தேன். அவர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களில் ஒருவனாக நானும் இணைந்து கொண்டேன். நாம் ஒவ்வொருவரும் ஒரு குறிப்பிட்ட பணத்தை எமது பிரயாணத்துக்காக வழங்குவது என இணங்கிக் கொண்டோம். அந்த கனடிய வாலிபர் பணத்தை பெரிதாக எதிர்பாராதவராகவும், தன்னுடன் துணைக்கு வரக்கூடியவர்கள் இருந்தாலே போதும் என்ற நிலையிலும் இருந்தார்.

அதன் பின்னர் ஒரு பிரயாண நாள் ஒழுங்கு செய்யப்பட்டு, ஒரு காலை நேரம் கொழும்பிலிருந்து புறப்பட்டோம். ஏறத்தாழ எட்டுப் பேர் அந்த வானில் பிரயாணம் செய்தோம். அந்த வாகனத்தின் உரிமையாளராகவும், அவரே அதன் சாரதியாகவும், நீர்கொழும்பைச் சேர்ந்த கிறிஸ்தவரான, நன்கு சிங்களம் பேசத் தெரிந்த ஒரு வாலிபர் வந்தார். நாம் நீர்கொழும்புக்கூடாக புத்தளம் மார்க்கத்தில் எமது பிரயாணத்தை வவுனியா நோக்கித் தொடர்ந்தோம். முன் ஆசனத்தில் சாரதியுடன் கனடாவிலிருந்து வந்திருந்த வாலிபர்; இருந்து பயணம் செய்தார். மற்றைய எல்லோரும் நடுவிலும், பின்னாலும் அமர்ந்திருந்தோம். பிரயாணம் தடைகள் ஏதுமின்றி மகிழ்ச்சிகரமாகத் தொடர்ந்து கொண்டிருந்தது. மாலை நேரம் அனுராதபுரம் நகரை அடைந்து, தேநீh அருந்துவதற்காக ஒரு உணவுச்சாலை அருகே வாகனத்தை நிறுத்தினோம்.

தொடர்ந்து பிரயாணம் செய்தால், வவுனியா அடைந்து அங்கு இரவு தங்கிவிட்டு, காலையில் யாழ்ப்பாணம் நோக்கிப் பயணிக்கலாமா என ஆராய்ந்தோம். ஏனெனில் யாழ்ப்பாணம் கோட்டையை இராணுவத்திடமிருந்து புலிகள் கைப்பற்றுவதற்கான யுத்தம் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கையில், புலிகள் வசமிடமிருந்து வவுனியா நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இராணுவத்தினர் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இந்த நிலைமையில் வவுனியாவில் தங்க முடியுமா என்ற சந்தேகம் எமக்கு இருந்தது. போக்குவரத்து மட்டுமின்றி, தகவல்கள் தொடர்புகளும் முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தபடியால், யாழ்ப்பாணத்தில் மட்டுமின்றி, வவுனியாவிலும் என்ன நடக்கிறது என்பதை நாட்டிலிருந்த ஏனைய மக்கள் அறிய முடியாமல் இருந்தனர்.

எமது ஆலோசனை அந்தத் தேநீர்ச்சாலையில் தொடர்ந்து கொண்டிருக்கையில், சில சாதாரண மக்கள் எம்மைச் சூழ நின்று வேடிக்கை பார்க்கத் தொடங்கினர். நாம் நிலைமை அசாதாரணமாக மாறுகிறது என்பதை உணரத் தொடங்கிய நேரத்தில், திடீரென சில பொலிசார் அங்கு தோன்றினர். அவர்கள் எம்மை வெளியே அழைத்துச் சென்று, எமது அடையாள அட்டைகளைப் பரிசோதித்த பின்னர், எம்மை விசாரிக்கத் தொடங்கினர். பெரும்பாலான கேள்விகளுக்கு எமது வாகனச் சாரதியே சிங்களத்தில் பதிலளித்தார். கனடாவிலிருந்து வந்திருந்த வாலிபரின் கனடிய கடவுச்சீட்டைத் துருவித்துருவி ஆராய்ந்த பொலிசார். அவரிடம் பல கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்டனர்.

இறுதியில் அந்தப் பொலிசார் எம்மை நோக்கி, இந்த நேரத்தில் வவுனியாவைக் கடந்து யாழ்ப்பாணம்

செல்வது சாத்தியமில்லை என்றும், வவுனியா செல்வதுகூட முடியாத காரியம் என்றும் கூறி, திரும்பிக் கொழும்பு செல்லுமாறு கேட்டுக் கொண்டனர். நாம் வேறு வழி எதுவுமின்றி கொழும்பு நோக்கிப் பயணமானோம். நேரம் மாலை மங்கிக் கருக்கலாகிக் கொண்டு வந்தது.

நாம் புத்தளம் நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த வேளையில், ஒரு பஸ் தரிப்பிடத்தில் ஒரு கிறிஸ்தவக் கன்னியாஸ்திரி பஸ் வருகையை நோக்கிக் காத்துக் கொண்டிருந்தார். அவருக்கு அருகில் எமது வாகனத்தை நிறுத்திய சாரதி அந்த கன்னியாஸ்திரிக்கு பவ்வியமாக வணக்கம் தெரிவித்துவிட்டு, வாகனத்தில் ஏறும்படியும், அவர் போகுமிடத்தில் இறக்கி விடுவதாகவும் வேண்டிக் கொண்டார். அந்தக் கன்னியாஸ்திரி சிறிது நேரம் தயங்கிய பின்னர் எமது சாரதியின் கழுத்தில் இருந்த கறுப்புக் கயிறில் தொங்கிக் கொண்டிருந்த குருசைப் பார்த்துவிட்டு ஏறிக் கொண்டார். முன் ஆசனத்தில் இருந்த கனடிய வாலிபர் அவருக்குத் தனது ஆசனத்தை வழங்கிவிட்டு, பின்னால் வந்து எம்முடன் அமர்ந்து கொண்டார். பின்னர் அவர், நாம் எல்லோரும் தமிழர்கள் என்பதையும், யாழ்ப்பாணம் செல்வதற்கு முயன்று திரும்பி வருகிறோம் என்பதையும் அறிந்து கொண்டு, எம்மீது அனுதாபம் கொண்டதுடன், இந்த தேவையில்லாத யுத்தம் பல அப்பாவி மக்களின் வாழ்க்கையை அவலத்துக்குள்ளாக்கியதையிட்டுத் தனது வருத்தத்தையும் தெரிவித்துக் கொண்டார்.

இதற்கிடையில் எமது வாகனத்தின் பின் சில்லில் இருந்த ஒரு ரயரிலிருந்து காற்று வெளியேறத் தொடங்கியது. சிறிது தூரம் ஓடிய பின்னர் சாரதி தெருவோரத்திலிருந்த ஒரு வாகனத் திருத்தகத்தில் வண்டியை நிறுத்தினார். வாகனத் திருத்துனர் விடயத்தைக் கேட்டறிந்து கொண்டு, எமது வாகனத்தின் ரயரை ஒட்டுவதற்காக அதைக் கழற்ற ஆரம்பித்தார். இதற்கிடையில் அங்கு நின்ற ஒரு சிலர் மூலம் சில தமிழர்கள் அந்த வாகனத் திருத்தகத்தில் நிற்பதை அறிந்த சிலர் அங்கு கூட ஆரம்பித்தனர். அத்துடன் அவர்கள் எமது வாகனத்தின் ரயரை ஒட்டக்கூடாது எனவும் அந்த திருத்துனரை வலியுறுத்தினர். நிலைமை விபரீதமாக மாறத் தொடங்கியது.

அதுவரை வாகனத்தை விட்டு இறங்காமல் அதற்குள் உட்கார்ந்திருந்த அந்தக் கன்னியாஸ்திரி நிலைமையை அவதானித்தவுடன் இறங்கி வந்து, அந்த மக்களுடன் சிங்களத்தில் சிறிது நேரம் உரையாடினார். அவரை அங்கு நின்ற சிலருக்கு முன்னரே ஓரளவு தெரிந்தும் இருந்தது. அவரது உரையாடலைத் தொடர்ந்து அவர்களில் பலர் கலைந்து செல்லத் தொடங்கினர். பின்னர் எவ்வித சிரமமுமின்றி ரயரை ஒட்டிக்கொண்டு புறப்பட்டோம். அந்த வாகனத் திருத்துனர் கேட்ட கூலியைவிட இரு மடங்கு பணத்தை கனடாவிலிருந்து வந்த இளைஞர் அவருக்கு வழங்கினார். அந்தக் கன்னியாஸ்திரி என்ன விளக்கம் சொல்லி அந்த மக்களைக் கலைந்து போகச் சொன்னார் என நாம் அவரிடம் கேட்கவில்லை. அவரும் அதைச் சொல்லவில்லை. அவரை அவரது இடத்தில் இறக்கிவிட்டு நாம் புத்தளம் நோக்கிப் பயணமானோம்.

காலையிலிருந்து பயணம் செய்து பல விதமான அலைச்சல்களால் நாம் எல்லோரும் களைத்திருந்ததால், அன்று இரவு புத்தளம் நகரில் தங்கிவிட்டு, அடுத்த நாள் காலையில் கொழும்பு நோக்கிய எமது பயணத்தைத் தொடரலாம் என எண்ணினோம். ஆனால் புத்தளத்தில் எங்கு தங்குவது என்ற பிரச்சினை இருந்தது. ஏனெனில் அங்கு பெரும்பான்மையாக முஸ்லீம் மக்கள் வாழ்ந்தாலும் (அப்பொழுது புலிகளால் வட பகுதி முஸ்லீம் மக்கள் வெளியேற்றப்பட்டிருக்கவில்லை), அங்கும் பல பாதுகாப்புக் கெடுபிடிகள் இருந்தன.

எம்முடன் பிரயாணம் செய்தவர்களில் ஒருவர், எம்மில் யாருக்காவது அங்குள்ள முஸ்லீம் மக்களில் எவருடனாவது தொடர்பு இருந்தால், அவர் மூலம் ஏதாவதொரு பள்ளிவாசலில் தங்கினால் பாதுகாப்பாக இருக்கம் என அபிப்பிராயம் தெரிவித்தார். அந்த ஆலோசனையைத் தொடர்ந்து எமது சாரதி தனக்குத் தெரிந்த முஸ்லிம் நண்பர் ஒருவரது வீட்டிற்கு வாகனத்தைச் செலுத்தினார். அதற்கிடையில் இடையே வழியில் ஒரு தடவை ரோந்துப் பொலிசார் எமது வாகனத்தை நிறுத்திச் சோதனை செய்தும்விட்டார்கள்.

நாம் அந்த முஸ்லீம் நண்பரைச் சந்தித்து ஆலோசனை கேட்ட போது, புத்தளம் நகர்கூட அப்பொழுது அவ்வளவு பாதுகாப்பான இடமானது அல்ல என்றும், பாதுகாப்பான ஒரே வழி, செலவைப் பார்க்காமல் அங்குள்ள அரசாங்க வாடிவீட்டில் (State Rest House) தங்குவது நல்லது என்றும் ஆலோசனை கூறினார். நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டோம். ஏனெனில் வாடிவீட்டில் தங்குவது என்பது அந்தக் காலத்தில் பணம் படைத்தவர்களினதும், அரசாங்க உயர் அதிகாரிகளினதும் பிதுரார்ஜிதமாக இருந்தது. சாமானியர்களான எமது பொருளாதார நிலைக்கு ஏற்புடையதல்ல என்பதே எமது தயக்கத்துக்குக் காரணம்.

ஆனால் எமது கனடிய வாலிப நண்பர் எமக்கெல்லாம் தைரியமூட்டி, தானே வாடிவீட்டுச் செலவை ஏற்பதாகவும், அங்கே அன்றைய இரவைக் கழிப்போம் எனவும் தெம்பூட்டி எம்மை அங்கே அழைத்துச் சென்றார். அங்கு எமக்கு அதிஸ்டவசமாக இடமும் கிடைத்தது. முதலில் களைப்புத்தீர எல்லோரும் குளித்தோம். அதன் பின்னர் ஓடர் கொடுத்த மது வந்தது. அதன் பின்னர் சுவைக்குப் பெயர்போன புத்தளம் இறால் குழம்புடன் சுவையான இரவு உணவு உண்டோம்.

நாம் அங்கு தங்கியிருந்த போது, அங்கு இரவு உணவுக்காக சில இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகள் வந்து சேர்ந்தனர். அவர்களும் உணவுக்கு முன்னர் சிறிது மது அருந்தினர். சிறிது நேரத்தில் அவர்கள் எமது மேசைக்கு வந்து எம்மைப்பற்றி விசாரித்துக் கொண்டு எம்முடன் அளவளாவிப் பழகினர். அவர்களும் நாங்களும் மனம்விட்டுப் பேசி மகிழ்ந்தோம். இந்த நிகழ்வுகள் எல்லாம் எம்மில் பலருக்கு ஆச்சரியமாக இருந்தது. ஏனெனில் வெளியே இந்த படை அதிகாரிகள் எம்மைக் கண்டால் எப்படி நடந்து கொள்வாகள் என்பதை, எம்மில் பலர் அனுபவரீதியாக அறிந்திருக்கிறோம். இதைத்தான் 'இருக்குமிடத்தில் இருந்து கொண்டால், எல்லாம் சௌக்கியமே' என ஒரு பாடல் வரியை கவிஞர் கண்ணதாசன் இயற்றினாரோ என்னவோ? அன்றிரவு நிம்மதியாகத் தூங்கினோம்.

அடுத்த நாள் காலை கொழும்பை நோக்கிப் பயணமானோம். எமது முதல் பயண முயற்சி தோல்வியில் முடிந்தது கவலையே என்ற போதிலும், இந்த அக்கினிப் பரீட்சையில் பங்குபற்றிய ஒரு திருப்தியும் ஏற்படாமல் இல்லை. திரும்பவும் இந்தியா சென்று யாழ்ப்பாணம் செல்லும் எனது திட்டத்தை தூசிதட்டி கைகளில் எடுத்தேன். அதுவரை எனது நண்பனின் பொஸ்வல்பிளேஸ் வீட்டில் தங்குவதற்காக அவனது வீட்டை நோக்கி எனது பயணப்பையைத் தூக்கிக்கொண்டு சலிப்புடன் நடந்தேன்.

தொடரும்

[முன்னைய பதிவுகள்]